DEPOSITION OF WITNESS

(CHAPTER XXII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE , SENDAMANGALAM

C.C.No.37/2025

PW - 2

| | | |
|---|---|---|
| Name | : | சந்திரபாபு (Lw - 2) |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act of 1969(Central Act 44 of 1969 on the ------------day of ----------26

**(எதிரி ஆஜர்)**

முதல் விசாரணை **Date : 17.04.2026**

நான் தற்போது சேலம் மாவட்டம், தம்மம்பட்டியில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது மைத்துனர் ஆவார். **(**சாட்சி எதிரியை அடையாளம் காட்டினார்**.)**

கடந்த 13.10.2024ம் தேதி எனது மனைவிக்கு ஆத்தூர் அரசு மருத்துவமனையில் இரண்டாவதாக பெண் குழந்தை பிறந்தது. அன்றைய தினம் மாலை ஆஜர் எதிரி எனக்கு போன் செய்தார். போனில் ஆஜர் எதிரி எனது மனைவியான அவரது அக்காவை அவரது வீட்டிற்கு அனுப்புமாறு கேட்டார், நானே நன்றாக பார்த்து கொள்கிறேன் என கூறியதற்கு எதிரி எனது அம்மா மற்றும் பாட்டி ஆகியோரை பற்றி ஆபாச வார்த்தைகளால் திட்டி கொலைமிரட்டல் விடுத்தார். சுமார் 10 நாட்கள் கழித்து நாங்கள் எனது மனைவியை அவரது தயார் வீடான எதிரி வீட்டிற்கு அனுப்பி வைத்தோம்.

பின்னர் சுமார் ஒரு மாதம் கழித்து கடந்த 07.11.2024ம் தேதி வியாழன் கிழமை அன்று சிங்களாந்தபுரம் காந்தி நகரில் உள்ள எனது சித்தி பேபி வீட்டிற்கு நானும் எனது

தம்பியும் சென்றிருந்தோம். அப்போது ஆஜர் எதிரியும் எனது சித்தி வீட்டிற்கு அருகில் உள்ள மனோஜ் என்பவரது வீட்டிற்கு வந்திருந்தார். அன்றைய தினம் மாலை சுமார் 03.15 மணிக்கு ஆஜர்எதிரி என்னை வீதிக்கு அழைத்து எனது அக்காவை ஏன்டா எனது வீட்டிற்கு அனுப்ப மாட்டிகிறிங்க என பேசி என்னை கையால் நெஞ்சில் அடித்து கீழே தள்ளி அடித்தார். எனது தம்பி தினேஷ் ஆஜர் எதிரியை தடுக்க வந்தபோது ஆஜர் எதிரி தனது கையில் வைத்திருந்த கத்தியால் எனது தம்பியின் இடதுபுற வயிற்றில் குத்தி கிழித்துவிட்டார். பின்பு ஆஜர் எதிரி என்னையும் எனது தம்பியையும் பார்த்து தேவடியா பசங்களா இன்னைக்கு உன்னை விட்டுவிட்டேன் என்னைக்கு இருந்தாலும் உன்னை குத்தாமல் விடமாட்டேன் என கொலைமிரட்டல் விடுத்து அங்கு இருந்து சென்றுவிட்டார்.

பின்பு நானும் எனது சித்தியும் எனது தம்பியை சிங்களாந்தபுரம் அரசு மருத்துவமனைக்கு முதல் உதவி சிகிச்சைக்கு அழைத்து சென்றோம். பின்பு மேல் சிகிச்சைக்காக நாமக்கல் அரசு மருத்துவமனைக்கு எனது தம்பியை அழைத்து சென்றோம். அங்கு அவர் சுமார் 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். இது சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

ஆஜர் எதிரி யார் என்றால் எனது மனைவியின் தம்பி ஆவார். எனது மனைவிக்கும் எனக்கும் அடிக்கடி தகராறு ஏற்படும் என்றால் சரியல்ல. எனது மனைவிக்கு எந்த தேதியில் குழந்தை பிறந்தது என்றால் 13.10.2024ம் தேதியில் பிறந்தது. நான் ஆஜர் எதிரிக்கு போன் செய்தேனா அல்லது அவர் எனக்கு போன் செய்தாரா என்றால் எதிரிதான் எனக்கு போன் செய்தார். ஆஜர் எதிரி என்னிடம் போனில் என்ன பேசினார் என்றால் எனது அக்காவை அனுப்பி வைடா இல்லை என்றால் உன்னை வெட்டிபுடுவேன் நீ என்னடா எனது அக்காவை பார்த்துகொள்வது எனது அக்காவை எனக்கு பார்த்துகொள்ள தெரியும் என கூறினார்.

எதிரி என்னிடம் எப்போது போனில் பேசினார் என்றால் எனக்கு குழந்தை பிறந்த தேதியிலேயே பேசினார். சம்பவத்திற்கு முன்பாக எனக்கும் ஆஜர் எதிரிக்கும் தகராறு ஏதேனும் ஏற்பட்டதா என்றால் இல்லை. அவ்வாறு தகராறு எதுவும் இல்லாத நிலையில் எதிரி ஏன் என்னை போனில் திட்டினார் என்றால் என்னுடைய முதல் குழந்தை எனது மனைவியில் தாயார் வீடான எதிரியின் வீட்டில் பிறந்தது இரண்டாவது குழந்தை எனது

வீட்டில் பிறக்கவேண்டும் என நான் எனது மனைவியை எனது வீட்டில் இருக்க கூறினேன் அதனால் எதிரி என்னை போனில் திட்டினார். (சாட்சி சாட்சியம் அளிக்கும்போது அழுதுகொண்டே சாட்சியம் அளிக்கிறார்.)

எனது மனைவியை ஆஜர் எதிரியின் வீட்டிற்கு எப்போது அனுப்பினோம் என்றால் குழந்தை பிறந்து சுமார் 10 நாட்கள் கழித்து அனுப்பி வைத்தோம். எனது மனைவி திரும்ப எப்போது எனது வீட்டிற்கு வந்தார் என்றால் இரண்டு வருடங்கள் ஆகிறது நாளதுவரை எனது மனைவி எனது வீட்டிற்கு வரவில்லை, இந்த வழக்கினை வாப்பஸ் பெற்றால்தான் எனது மனைவி எனது வீட்டிற்கு வருவார் என எனது மனைவி மற்றும் எதிரி மற்றும் அவரது பெற்றோர்கள் கூறிவிட்டார்கள்.

ஆஜர் எதிரி எனது தம்பியை எங்கு எப்போது கத்தியால் குத்தினார் என்றால் 07.11.2024ம் தேதி மாலை 03.15 மணிக்கு சிங்களாந்தபுரம் காந்தி நகரில் உள்ள எனது சித்தி வீட்டிற்கும் மனோஜ் வீட்டிற்கும் அருகே வைத்து குத்தினார். ஆஜர் எதிரி அங்கு ஏன் வந்தார் என்றால் அவர் அங்கு விசேஷத்திற்கு விருந்தினராக வந்திருந்தார் அங்கு எனக்கும் ஆஜர் எதிரிக்கும் கைகளப்பு ஏற்பட்டது. நானும் எனது தம்பியும்தான் கத்தியை எடுத்துவந்து எதிரியை பார்த்து ஏன் எனது மனைவியை எனது வீட்டிற்கு திரும்ப அனுப்பமாட்டிகிறிங்க என கூறி எதிரியுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டோம் என்றாலும், அங்கு நடந்த சண்டையில் நான் வைத்திருந்த கத்தியால் எனது தம்பிக்கு காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை: இல்லை.

**Taken down before me in open court and read/interpreted to the witness and acknowledged by him/ her to be correct.**

**Sd/- Tr.S.Raja Kumaran B.E. L.L.B.,**
**Judicial Magistrate,**
**Sendamangalam**